# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 50 பிரசோர்பத்தி தை 02 16 01 1992 வியாழன்


- கொக்கட்டிச்சோலைப் படுகொலை விசாரணை

## சாட்சியம் அளிக்க இராணுவத்தினர் மறுப்பு!

இராணுவத்தினரின் கொக்கட்டிச்சோலை பொதுமக்கள் படுகொலை குறித்து விசாரணை நடத்தி வரும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க 17 ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மறுத்துவிட்டனர்.

இவ் விசாரணைக்குழு பொது மக்களின் சாட்சியங்களை பதிவு செய்து பூர்த்தியாக்கிய பின்னர் இராணுவ தரப்பு சாட்சியங்களை பதிவு செய்ய நேற்று முயன்ற

...04ஆம் பக்கம் பார்க்க

# இராணுவ தளபாடத்திற்கு ஸ்ரீலங்கா கிழ. ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம்

## மேற்குலக நாடுகளின் கட்டுப்பாடுகள் தீவிரமடைவதே காரணம்

ஸ்ரீலங்காவிற்கான இராணுவத் தளபாட விற்பனையில் மேற்குலக நாடுகள் சில கட்டுப்பாடுகளை விதிக்க ஆரம்பித்ததினால் ஸ்ரீலங்கா அரசு தற்போது கலைக்கப்பட்ட முன்னாள் 'வார்சோ' (Warsaw) அமைப்பின் கிழக்கு ஐரோப்பிய நாடுகளையே நம்பியிருப்பதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

கடந்த ஆண்டு சிங்கப்பூரில் இராணுவ தளபாடக் கண்காட்சியொன்று நடைபெற்றதாகவும் இக் கண்காட்சிக்கு ஸ்ரீலங்கா இராணுவக் குழுவொன்று சென்றதாகவும் அச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### ஸ்ரீலங்கா குழுவின் நாட்டம்

கண்காட்சியில் கலந்து கொள்ளச் சென்ற ஸ்ரீலங்கா குழு அங்கு வைக்கப்பட்டிருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் இராணுவத் தளபாடங்களிலேயே அதிக அக்கறை காட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### செக்கோஸ்லவக்கிய தளபாடங்கள்

முன்னாள் வார்சோ

—04 ஆம் பக்கம் பார்க்க

## 20லட்சம் ரூபா கொள்ளை, கொலை விசாரணையில் தகவல்;

## தோட்ட சுப்பிரின்டன் சாகவில்லை சுடு சுடு என்று இளைஞர் ஒருவர் தமிழில் கூறினார்

எல்ல இந்துகல தோட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 20லட்சம் ரூபா கொள்ளை கொலைச் சம்பவங்கள் தொடர்பாக உயர் மட்ட விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

கொள்ளையர்கள் செங்கலடியில் இருந்து பசிமிட்டியாவை, சியம்பலாண்டுவ, படல்கும்பரகாட்டு வழியாக நமுனுகலயை வந்தடைந்திருக்கலாம் என சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச்சூட்டு சம்பவம் நடைபெற்றதை பசிலகட்டுவ நகரில் உள்ள வர்த்தர்கள் நேரில் கண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொள்ளையடித்த இளைஞர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து, கொள்ளையடித்துக் கொண்டு தமது சீருடை

—04 ஆம் பக்கம் பார்க்க

பொராலிகளின்

### கொள்ளை, கொலை சம்பவத்தில்

## காயமுற்ற பொலிஸ்காரர் ஆபத்தான நிலையில்

கடந்த வெள்ளிக்கிழமை பதுளை மாவட்டம் எல்ல இந்துக்கல தோட்டத்தில் இடம்பெற்ற கொள்ளை

பெரேராவின் 24) சடலம் அவரது சொந்த இடமான மொரட்டுவவுக்கு கொண்டு செல்லப்பட்ட

## ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோருகிறார் நெடுமாறன்?

தமிழக காமராஜர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நெடுமாறன் வெளிநாடு ஒன்றில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்துள்ளதாக சென்னை வட்டாரங்களை ஆதாரம் காட்டி கொழும்புப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழக அரசு தடாச் சட்டத்தை பயன்படுத்தி அரசியல் எதிரிகளையும் திராவிட இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களையும் பழி வாங்கி வருவதினாலேயே இவர் தாமும் இச்சட்டத்தின் கீழ் பழிவாங்கப்படலாம் என அஞ்சுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் அநேகமாக ஜேர்மனியிலேயே அரசியல் தஞ்சம் கோரியிருக்கலாம் என அப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

06

## மட்டக்களப்புக் கிராமங்களில் படையினர் துப்பாக்கிச் சூடு

மட்டக்களப்பு போரதீவுக் கிராமம் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இதில் இரு பொதுமக்கள் கொல்லப்பட்டனர். நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தின் போது படையினரால் அக்கிராமத்தில் பல வீடுகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

வாகனேரியிலும் கடந்த

...04ஆம் பக்கம் பார்க்க

## இடம்பெயர்ந்த மாணவருக்கு தற்காலிகக் கொட்டகைகள்

காரைநகர், தெல்லிப்பழை முதலான இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வலிகாமம் மேற்குப் பிரிவில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்று வரும் மாணவர்களின் இட நெருக்கடியைப் போக்க சுழிபுரம் போரூட் ஸ்தாபனம் தற்காலிக கொட்டகைகளை அமைக்க நிதி உதவி வழங்கியுள்ளது.

இப்பாடசாலைகளில் இருக்கும் மலசல கூடங்களும் திருத்திக் கொடுக்கப்படவிருப்பதோடு தற்காலிக மலசல

.. 04 ஆம் பக்கம் பார்க்க

## பதுளைத் தமிழ்ப் பெண் பொலிஸாரால் தடுத்துவைப்பு

பதுளைப் பகுதியைச் சேர்ந்த தமிழ்ப் பெண்மணி ஒருவர் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவரது டயறியில் நோர்வூட் பெருந்தோட்டத் தாதியின் பெயர் முகவரிகள் இருந்ததால் இவரை நோட்டன் பொலிஸார் தடுத்து வைத்

தொழிற் சங்கங்கள் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு

—04 ஆம் பக்கம் பார்க்க

## இரு பெண் அமைச்சர்களில் கருத்து வேறுபாடுகளாம்

கல்வியமைச்சில் உள்ள இரு

திகள் தெரிவிக்கின்றன.

ருக்கலாம் என சந்தேகிப்ப தாக பொலிஸார் தெரிவித் தனர்.

## போராளிகளின் சிலை திறப்பு

போராளிகளைப் போன்ற ஏழு சிலைகள் இன்று வியா ழன் வல்வை திருவளி புனித மைதானத்தில் மாலை 4 30 மணியளவில் திறந்து வைக்க ஏற்பாடாகியுள்ளது. (09)

கடந்த வெள்ளிக்கிழமை பதுளை மாவட்டம் எல்ல இந்துக்கல தோட்டத்தில் இடம்பெற்ற கொள்ளை கொலைச் சம்பவத்தில் துப் பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ள ரிசேர்வ் பொலிஸ்காரர் ஆரியசேன ஆபத்தான நிலையில் இருப் பதாக தெரிவிக்கப்படுகிறது.

கொலை செய்யப்பட்ட தோட்டசின்னத்துரை தர்சன்

பெரேராவின் 24) சடலம் அவரது சொந்த இடமான மொரட்டுவவுக்கு கொண்டு செல்லப்பட்டது.

—04 ஆம் பக்கம் பார்க்க

யின் பெயர் முகவரிகள் இருந் ததால் இவரை நோட்டன் பொலிஸார் தடுத்து வைத் துள்ளனர்.

இவரை விடுவிக்குமாறு

## ★ எம்பிலிப்பிட்டியாப் பகுதியில்

# காணாமற்போன பாடசாலைச் சிறுவர்கள் விசாரணைக்கு சட்டத்தரணிகள் கோரிக்கை

1989 ஆம் ஆண்டிற்கும் 1990 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதி யில் எம்பிலிப்பிட்டியாவில் காணாமற்போன 31 பாட சாலைச் சிறுவர்கள் குறித்து விசாரணை நடத்த விசா ரணை ஆணைக்குழு வொன்றை நியமிக்குமாறு தென்பகுதி சட்டத்தரணிகள் சங்கம் கோரியுள்ளது

ஜனாதிபதி பிரேமதாஸ விடம் விடுக்கப்பட்ட இக் கோரிக்கையில், காணாமற் போன அனைத்து இளைஞர் களும் 17-20 வயதுக்கு இடைப் பட்டவர்கள் எனச் சுட்டிக் காட்டி அவர்களின் பெயர் விவரங்களையும் வெளியிட்டுள்ளது.

காணாமற்போன பாட

...04 ஆம் பக்கம் பார்க்க

## கருத்து வேறுபாடுகளாம்

கல்வியமைச்சில் உள்ள இரு பெண் அமைச்சர்களுக்கு இடையில் கருத்து வேறுபாடு நிலவுவதாக கொழும்புச்செய் திகள் தெரிவிக்கின்றன.

கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரனும், கல்விச்சேவை கள் அமைச்சர் சுனித்ரா ரண சிங்கவுமே இவ்வாறு கருத்து வேறுபட்டு வருவதாகத் தெரி விக்கப்படுகிறது.

கல்வியமைச்சராக பணி புரிந்த லலித் அத்துலத் முத லியின் ராஜினாமவையடுத்து

—04 ஆம் பக்கம் பார்க்க

## தைப்பொங்கல் தினத்தில் படையினர் சூடு

தைப்பொங்கல் தினமான நேற்று படையினர் எதுவித தாக்குதலும் மேற்கொள்ள மாட்டார்கள் என பாது காப்பு அமைச்சு அறிவித்தி ருந்தது.

ஆனால் மண்டைதீவில் உள்ள இராணுவத்தினரும் வலிவடக்கில் உள்ள இராணு வத்தினரும் நேற்றுக்காலை கண்டபடி சுட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (06)

## கொள்ளை, கொலை பற்றி பலர் மீது விசாரணை

எல்ல இந்துகல தோட்டத் தைச் சேர்ந்த 15 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட சகல ஆண்களும் விசாரணை செய்யப்பட்டதாக தெரிவிக்

...04 ஆம் பக்கம் பார்க்க

## ‘வாய் தடுமாற்றம் பதினைந்து நிமிடமாகவா?’

அண்மையில் புதுடில்லியில் நடந்த சம்பவம் இது. இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதரும், இந்திய மதிதிய அமைச்சர் சவானும் அண்மையில் சந்தித்துக் கொண்டனர்.

அப்போது தூதுவர் அமைச்சர் சவானிடம் ‘ராஜீவ் கொலையில் அமெரிக்காவையும் சம்பந்தப்படுத்திப் பேசி விட்டீர்களே’ என்று சற்றுக் கோபத்துடன் கேட்டார்.

அதற்கு சவான் ‘மன்னித்து விடுங்கள், வாய் தடுமாறி வந்து விட்டது’ என்று சமாதானம் சொல்ல முற்பட அமெரிக்கத் தூதுவரால் பொறுத்துக் கொள்ள முடியாமல் போய் விட்டது.

‘பதினைந்து நிமிட நேரமாகவே வாய் தடுமாறியா அதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தீர்கள்!’ எனக் கேட்டு விட்டு அவ்விடத்தை விட்டே அகன்று விட்டார். (22)

## தந்தையைஇழந்தபிள்ளைகளுக்கான சமாச உதவி தொடரும!

நாட்டிலேற்பட்ட வன்செயல்கள் காரணமாகக் குடும்பத் தலைவனை இழந்து வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற 35 பிள்ளைகள் தங்களது கல்வியினைத் தொடர்வதற்காக யாழ் மாநகர சனசமூக நிலையங்களின் சமாசம் மாதாந்தம் வழங்கி வந்த நிதி உதவி இரண்டு வருடங்களைப் பூர்த்தியாக்கியுள்ளது.

இத் திட்டத்தின் விதிமுறைகளுக்கமைய, இரண்டு வருடங்களுக்குத் தொடர்ச்சியாக உதவி வழங்கப்பட்டதால் இவ்வுதவியைப் பெற்றவர்களுக்குத் தொடர்ந்தும் நிதி உதவி வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது

இருப்பினும் இவ்வாறு உதவி நிறுத்தப்பட்டவர்களது குடும்பநிலை, கல்வியின் முன்னேற்றம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வு செய்யப்பட்டு, இந்த நிதி உதவி முக்கியமாகத் தேவைப்படுகின்ற பிள்ளைகள் என்று கருதப்படுகின்றவர்களுக்குத் தொடர்ந்தும் இரண்டு வருடங்களுக்கு இந்த உதவியினை வழங்குவதற்கு மேற்படி சமாசம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இத் திட்டத்தில் 55க்கும் அதிகமான பிள்ளைகள் நிதி உதவியினைப் பெற்று வருகின்றார்கள். (25)

## தொண்டாவின் கைவிடப்படும்?

அமைச்சர் தொண்டமானின் யாழ் விஜயம் கைவிடப்படலாம் என்று அரச சார்பு பத்திரிகையான ‘தினகரன்’ நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

## யாழ் -விஜயம்

‘தினகரன்’ ஊகம்

அமைச்சர் தொண்டமானால் இனப்பிரச்சினைத் தீர்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் குறித்து தெற்கில் திட்டவட்டமான ஒரு முடிவு இதுவரை எடுக்கப்படாமையே இதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இது குறித்து அமைச்சர் தொண்டமான் எதுவும் தெரிவிக்கவில்லை.

## பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கச் சலுகை!

1990 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்று அதற்கு விண்ணப்பிக்காது விட்டோருக்கு மீண்டும் சலுகை வழங்கப்படவுள்ளது.

இடம்பெயர்ந்த காரணத்தினாலோ அல்லது பாடசாலை அதிபரிடம் சான்றிதழ் பெறமுடியாத காரணத்தினாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தினாலோ பல்கலைக்கழக அனுமதிகோரி விண்ணப்பிக்க முடியாது போனவர்கள் இதன்படி தற்பொழுது ...கப்பட்டுள்ளது.

இவர்கள் தமது விண்ணப்பத்துடன், உரிய காலத்தில் விண்ணப்பிக்கத் தவறிய காரணத்தை உறுதிப்படுத்தி சத்தியக் கடதாசி ஒன்றினையும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

## வெளியீட்டு விழா

தமிழ்த்தாய்ப் பதிப்பகத்தின் ‘இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள்’ நூல் வெளியீட்டு விழா 18-ம் திகதி காலை 9 30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும். அங்கு வெளியீட்டுரையை

★ பலத்த எதிர்ப்பினை அடுத்து

# யாழ் மருத்துவபீடத்தை இடம் மாற்றும் திட்டத்தை அரசு கைவிட்டது!

உயர்கல்வி அமைச்சர் நேற்று அறிவிப்பு

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடம் மூடப்பட மாட்டாது என நீதி உயர் கல்வி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத் அறிவித்துள்ளார்.

யாழ் மருத்துவ பீடத்திற்கான நிதி ஒதுக்கீட்டிலும் எந்தவித மாற்றமும் செய்யப்பட மாட்டாது எனவும், அது வேறு பகுதிகளுக்கு இடம் மாற்றப்படமாட்டாது எனவும் அத்தகைய எந்த நோக்கமும் அரசுக்குக் கிடையாது எனவும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தை யாழ்ப்பாணத்திற்கு வெளியே இடம்மாற்ற கொழும்பில் முயற்சியெடுக்கப்பட்டிருந்தமை பற்றி வாசகர்கள் அறிந்ததே.

இந்த முயற்சிக்குப் பல்கலைக்கழக மட்டத்திலும், இங்குள்ள ஏனைய பல அமைப்புக்களும் பலத்த எதிர்ப்புத் தெரிவித்து வந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## பிறநாடுகளில் வதியும் இலங்கையர் கணக்குகளில் பெருமளவு பணம்!

1991 ஆம் ஆண்டு ஆவணி மாதம் இலங்கை மத்திய வங்கி பிறநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் அந்த நாட்டு நாணயத்திலேயே இலங்கையில் உள்ள வங்கிகளில் கணக்கு வைத்துக்கொள்ள அனுமதி வழங்கியதையடுத்து பிறநாடுகளில் வதியும் 4500க்கும் மேற்பட்ட இலங்கையர்கள் கணக்குகள் ஆரம்பித்துள்ளனர்.

இப்படி வைப்புச் செய்யப்படும் பணத்திற்கு வரிச் சலுகையும் இலங்கை அரசு அளிக்கிறது.

ஆர். ஏ கி. என்று அழைக்கப்படும் இக் கணக்கில், இன்று வரை 4 5 மில்லியன் டொலர்களும், 07 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களும், 05 மில்லியன் டச் மார்க்குகளும் வைப்புச் செய்யப்பட்டிருப்பதாக மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ அறிக்கை தெரிவிக்கிறது. (16)

## ‘புதிய பிரதேச நிர்வாகம் இந்திய பஞ்சாயத்து முறையை ஒத்தது’

இலங்கையில் கச்சேரி முறைமைகள் நீக்கப்பட்டு பிரதேச வாரியாக அதிகாரம் பரவலாக்கப்படுவது இந்தியாவின் பஞ்சாயத்து அமைப்புப் போன்றது என பி. பி. ஸி குறிப்பிட்டது.

இம் முறையைப் பலதரப்பினரும் வரவேற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது இதன் மூலம் நிர்வாக தாமதங்களை தவிர்க்க முடியும் எனவும் பி. பி ஸி சுட்டிக் காட்டியது.

## திருமுறை ஆய்வரங்கு

மனோலயா மன்றத்தினரின் திருமுறைப் பண்ணிசை ஆய்வரங்கு இம் மாதம் 18-ம் திகதி காலை 8 30 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருமதி மங்கையர்க்கரசி சிற்றம்பலம் தலைமையில் நிகழும் இவ்வாய்வரங்கில் திருமுறை ஆய்வு, பண்ணிசை ஆய்வு, பண்ணும், பரதமும் ஆய்வு ஆகியன இடம்பெறும்.

## காப்பரண் வெளியீட்டு விழா

பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தின் ‘காப்பரண்’ முத்திங்கள் இதழ் வெளியீட்டு விழா 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (9)

## சுதேச வைத்தியர் சேவையை தவறாகக் காட்ட முயற்சி! சித்த மாணவர் அறிக்கை

யாழ் மாவட்டத்தில் சுதேச மருத்துவர்களுக்கு மருந்து விநியோகிக்கக்கூடாது என எடுக்கப்பட்ட முடிவை சுதேச வைத்திய அபிவிருத்திச் சங்கமும், சித்த மருத்துவ மாணவர் மன்றமும் வன்மையாகக் கண்டித்துள்ளன

இன்றைய போர்க்கால சூழ்நிலையில் போக்குவரத்து வசதிகள் இன்மையால் மக்கள் பல துன்பங்களைச் சுமந்து கஷ்ட நிலையில் வாழ்கின்றார்கள் பலர் நோயாளர்களாகவும் உள்ளனர். தமது சிகிச்சைக்காகப் பெரிய வைத்தியசாலைகளுக்குச் செல்லக் கூடிய நிலையில் அவர்கள் இல்லை. வைத்திய ஆலோசனைகள் பெறச் சென்றாலும் காசும் நேரமும் விரையமாகின்றன. இந்த நிலையில் கிராமப் புறங்களில் சுதேச வைத்தியர்களின் சேவையினால்தான் மக்கள் இன்று நோயில் இருந்து விடுபடுகிறார்கள். அவர்களினதும் சேவை இல்லாவிடின் சுகாதார சீர்கேடு மோசமான நிலையில் இருந்திருக்கும்.

எந்த வைத்தியனாக இருந்தாலும் தான் கொடுக்கும் மருந்தின் தன்மையையும், செய்கையையும் பக்க விளைவினையும் அறிந்து வைத்தியத்தைச் செய்வானே ஆகில் அதில் எந்தவித தவறும் இருப்பதாகத் தோன்றவில்லை. மேலைத்தேச வைத்தியர்கள் உள்ளக பயிற்சிக்கு யாழ்ப்பாணம் வரமறுக்கும் வேளையிலும் சுதேச வைத்தியர்கள் யாழ்ப்பாணத்தில் கஷ்டத்தின் மத்தியில் சேவையாற்றுகின்றார்கள்.

பல பிரச்சினைகளாலும் பாதிப்புறும் மக்களுக்குச் சேவை செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டிய இந்தச் சமயத்தில் சேவை புரியும் சுதேச வைத்தியர்களை மக்களுக்குத் தவறாக எடுத்துக்காட்ட முயற்சிக்கக் கூடாது என இது தொடர்பாக மேற்குறிப்பிட்ட அமைப்புக்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு பத்திரிகைத்துறை பாடநெறி!

எதிர்வரும் கல்வி ஆண்டில் பத்திரிகைத் தொடர்பு பயிற்சியையும் பல்கலைக்கழகத்தில் பயில, பட்டதாரி மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

“ஆசியன் பவுண்டேசனின்” ஆதரவில் கொழும்புப் பல்கலைக் கழகங்களில் மாத்திரம் தொடங்கவுள்ள இப்பட்டப்படிப்பிற்கான புத்தகங்கள் ஆங்கிலம் சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் மாத்திரம் பிரசுரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## சனசமூக நிலையங்கள் மூலமாக

## மாவட்ட பண்ணிசைப் போட்டி மார்ச் 18 இல் நடைபெறும்!

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பண்ணிசைப் போட்டிகள் 18-03-1992 புதன்கிழமை ...

இதற்கு முன்பாகவும் மாவட்ட மட்டத்தில் 18-3 92 அன்றும் போட்டிகள் நடைபெற உள்ளன. (15)

ணப்பிக்க முடியாது போன வர்கள் இதன்படிதற்பொழுது விண்ணப்பிக்கச் சலுகை வழங்

பதி அரங்கில் நடைபெறும். அங்கு வெளியீட்டுரையை திரு. ரவி நிகழ்த்துவார்.

## யோசனைகள் குறித்து விவாதிக்க தெரிவுக்குழு உறுப்பினர்களுக்கு தடை!

இனப்பிரச்சினை தீர்வு தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்போர், இது தொடர்பாக மேற்படி குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த யோசனைகள் குறித்தும் பகிரங்கமாக விவாதிக்கக் கூடாதென பணிக்கப்பட்டுள்ளது.

இந்த பணிப்புரை விடுக்கப் பட்டமைக்கான காரணமெதுவும் உடனடியாகத் தெரிவிக்கப்படவில்லை.

எனினும் அமைச்சர் தொண்டாவின் யோசனைகள் குறித்து எழுந்துள்ள ஒரு இழுபறிநிலையே இதற்குக் காரணமாக இருக்கலாமெனவும் சொல்லப்படுகின்றது.

## சனசமூக நிலையங்கள் மூலமாக குளோரின் பவுடர் விநியோகம்

கோப்பாயின் சில பகுதிகளில் நெருப்புக் காய்ச்சல் தொடர்ச்சியாகப் பரவி வருகிறது.

சில இடங்களில் வயிற்றோட்டமும் பரவிவருகிறது. நோய் பரவுவதைத் தடுப்பதற்காக கோப்பாய்ச் சுகாதாரப் பகுதியினர் சனசமூக நிலையங்கள் மூலமாக குளோரின் பவுடரை விநியோகித்து வருகின்றனர்.

இதனை ஒவ்வொரு வீட்டாரும் கிணறுகளில் கலந்துவிடும்படி அறிவுறுத்தப்படுகின்றனர். (35)

18-03-1992 புதன்கிழமை நடைபெறவுள்ளது.

பாடசாலை மட்டத்தில் 31-1-92 இற்கு முன்பாகவும், கோத்தணி மட்டத்தில் 14 2.92 க்கு முன்பாகவும் கோட்டமட்டத்தில் 28-2-92

மட்டத்தில் 18-3 92 அன்றும் போட்டிகள் நடைபெற உள்ளன. (15)

## கண்டாவளையில் புதிய பாடசாலை; கல்விப்பணிப்பாளர் திறந்துவைத்தார்

கிளிநொச்சி கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மயில்வாகனபுரம் கிராமத்தில் ஒரு புதிய பாடசாலை அமைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் திரு. கந்தசாமி கடந்த வியாழக்கிழமை இதனைத் திறந்து வைத்தார்.

இப்பாடசாலையில் ஐந்து வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (08)

## சண்டிலிப்பாயில் ஆண்டு விழா

சண்டிலிப்பாய் மணிமேகன் சனசமூக நிலைய ஆண்டு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சீரணி நாகபூசணி அம்மன் கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது.

மாவீரர் மணிமேகனின் உருவப்படம் அங்கு திரைநீக்கம் செய்யப்படுவதுடன் அவரது பெற்றோர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர் (37)

# குடிவரவு குடி அகல்வு குற்றங்களை விசாரணை செய்ய தனி நீதிமன்றம்!

## கடந்த வருடம் மட்டும் 915 பேர் மீது குற்றச்சாட்டு

குடிவரவு குடி அகல்வு திணைக்களம், கட்டுநாயக்கா விமான நிலைய மூலம் வெளியேசெல்வோரும் உள்ளே வருவோரும் செய்யும் ஏமாற்று வேலைகளையும் குற்றங்களையும் விசாரணை செய்து தண்டனை வழங்க அதற்கென்றே தனி நீதிமன்று ஒன்றை நிறுவ தீர்மானித்துள்ளது.

1991-ம் ஆண்டில் மாத்திரம் 915 பேர் இரகசியப் பொலிசாரிடம் மோசடிக் குற்றங்கள் தொடர்பாக கையளிக்கப்பட்டுள்ளனர். மேலும் இக்காலப் பகுதியில் கடவுச் சீட்டில் திருத்தம் செய்த 456 பேர்களும், ஆள்மாறாட்டம் செய்த 162பேர்களும், கடவுச் சீட்டின் தலை மாத்திரம் 94 பேர்களும் திருத்தம் செய்யப்பட்ட விசா வைத்திருந்ததற்காக 203பேர்களும் சுங்கப் பகுதியினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வித குற்றம் புரிந்தவர்களுக்கு நீர்கொழும்பு, ஹுனுவென்ன ஆகிய நீதிமன்றங்களில் சென்ற ஆண்டில் 3,121,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (16)

# பாராளுமன்றத் தெரிவுக்குழு முன் நேரடியாக ஆஜராக அழைப்பு!

இனப்பிரச்சினை தீர்வுக்கான யோசனைகளை இனப்பிரச்சினை தெரிவுக்குழுவிடம் சமர்ப்பித்துள்ள கட்சி, குழு உறுப்பினர்களும் மற்றும் தனிநபர்களும் தெரிவுக்குழு முன் ஆஜராகுமாறு அழைக்கப்படவுள்ளனர்.

அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைகள் குறித்து நேரடியாக விளக்கம் பெற்று ஆராய்ந்து அறிவதற்காகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## இருபாலையில் கருத்தரங்கு

இருபாலை அன்னை இந்திரா சனசமூக நிலையத்தில் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு எய்ட்ஸ், உணவு, சுகாதாரம் பற்றிய கருத்தரங்கொன்று இடம்பெறவுள்ளது.

# நாவலர் நெடுஞ்செழியனுக்கு திருவள்ளுவர் விருது!

தமிழக அரசினால் வருடா வருடம் வழங்கப்படும் 'திருவள்ளுவர் விருது' இவ்வருடம் தமிழக அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியனுக்கு வழங்கப்படவுள்ளது.

நாளை சென்னையில் நடைபெறவுள்ள திருவள்ளுவர் திருநாளில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா இவ்விருதை நெடுஞ்செழியனுக்கு வழங்குவார்.

# பேராதனை வெளிவாரி முடிவுகள் அடுத்த மாதம் வெளியாகும்

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் இடம்பெற்ற பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி கலை முதற்தேர்வுப் பரீட்சை முடிவுகள் பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் வெளியாகவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தோரில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இருபது சத விதமானோரே தோற்றியிருந்தனர்.

சிங்கள பரீட்சார்த்திகளின் வினாத்தாள்கள் திருத்துவதில் ஏற்பட்ட கால தாமதமே இம்முடிவுகள் வெளியாவதில் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (35)

## கலாவதி வெளியீட்டு விழா

பலாலி ஆசிரிய கலாசாலையின் வருடாந்த 'கலாவதி' மலர் வெளியீட்டு விழா (1990/91) நாளை 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கலாசாலை மண்டபத்தில் கலாசாலை அதிபர் ஆர். எஸ் நடராஜா தலைமையில் நடைபெறும்.

## கலாநிதி பட்டம்பெற்றார்

பேராதனை பல்கலைக்கழக புவியியல்துறை முதுநிலை விரிவுரையாளரான நமசிவாயம் வேல்முருகு பேராதனை பல்கலைக்கழகத்திற்கு "இலங்கை பெருந் தோட்டங்களில் வாழும் இந்திய வம்சாவழியினரின் சமூக புவியியல்" என்ற ஆய்வேட்டினை சமர்ப்பித்து 1991ஆம் ஆண்டுமுதல் கலாநிதி பட்டம் பெற்றுள்ளார்.

இவர் பருத்தித்துறையைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# முதியோர் விழிப்புணர்ச்சி பற்றி மாணவரிடையே கட்டுரைப் போட்டி!

தெஹிவளையில் அமைந்துள்ள இலங்கை ஹெல்பேஜ் நிறுவனம் இலங்கை முழுவதிலும் உள்ள பாடசாலை மாணவர்களுக்கிடையே முதியோர் பற்றிய விழிப்புணர்ச்சியை உருவாக்கும் நோக்குடன் கட்டுரைப் போட்டியொன்றை நடாத்தி பரிசில்களை வழங்க உள்ளது.

இப் போட்டிகள் பாடசாலைகளில் கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு அடிப்படையில் நடாத்தப்படும். ஒவ்வொரு பிரிவிலும் மூன்று மூன்றாக அறுவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் ஆக்கங்கள் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்படும்.

இக் கட்டுரைகள் தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் நடாத்தப்படலாம். முதலாம் பரிசாக ரூபா ஆயிரமும் இரண்டாம் பரிசாக ரூபா ஐநூறும் ஒவ்வொரு பிரிவினர்க்கும் வழங்கப்படவுள்ளன.

இப் போட்டிக்கான கட்டுரைத் தலைப்புக்கள் ஒவ்வொரு பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (15)

# மாணவருக்கு இலவச சீருடை! அரசு ஆராய்வதாகத் தகவல்

பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடப் புத்தகங்களை வழங்குவது போல இலவச சீருடைகளையும் வழங்கும் திட்டமொன்று பற்றி தற்பொழுது ஆராயப்பட்டு வருவதாக அறியப்படுகின்றது.

வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் இது பற்றியும் பிரஸ்தாபித்தார்.

அரசு தற்பொழுது மேற்கொண்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றி பெற்றால் இம் முயற்சி இலகுவில் வெற்றி பெறுமென அவர் அங்கு குறிப்பிட்டார்.

## கதறி அழவேண்டாம் தாயே!

நானிறந்தால் கதறி அழவேண்டாம் தாயே!-உன்
மான மகன் புறமுதுகு காட்டி ஓடான்;
ஈனச் சிங்களவன் எமையழிக்க வந்தபின்னும்
பாவ உடம்பைச் சுமப்பானோ உன் மகன்?
ஆனை வரினும் அசையாமல் நின்றெதிர்த்து
மானத் தமிழ் மண்ணைக் காப்பேன் தாயே!

-கவிஞர் வாஞ்சிநாதன்

# ஞாயிறு வழங்கும் அற்புத நலன்கள்

இயற்கை வழங்கும் அற்புத நலன்களைப் பற்றி நாம் உணர்வது குறைவு. அவை பற்றி நாம் சிந்திப்பதே இல்லை.

நம்மைச் சுற்றிலும் நடைபெற்று வருகின்ற ஓர் நிகழ்ச்சி. நாம் அதைப் பார்க்கவோ, கேட்கவோ முடியாது.

அதுதான் ஒளி இயைபாக்கம். பூமியிலே நடைபெற்று வருகின்ற தனிச் சிறப்பு வாய்ந்த, மிக முக்கியமான வேதியல் உருவாக்கம் அதுவே.

செடிகளின் செல்களிலே ஒளி இயைபாக்கம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது.

இது செடிகளுக்கும், மிருகங்களுக்கும் உணவை உற்பத்தி செய்வதோடு நின்று விடாமல் நாம் சுவாசிக்கின்ற காற்றோடு கலப்பதற்கு உயிர்க்காற்றையும் (ஆக்சிஜின்) அனுப்பி வைக்கிறது.

காற்றானது சமுத்திரங்களின் மேல் மிதந்து சென்று நீரை ஈர்த்து பல்லாயிரம் மைல்கள் கடந்து சென்று காய்ந்த, உலர்ந்த நிலப் பகுதிகளிலே மழையாகவும், பனியாகவும் பெய்கிறது மேகத்தால் எடுத்துச் செல்லகியலும் நீரானது நிலத்தடி நீரைப் பெருக்கி ஓடைகளுக்கும், ஆறுகளுக்கும், ஏரிகளுக்கும் நீரை வழங்குகின்றது.

இந்த இரண்டு செயல்களையும் புரிவதற்குச் சூரியனே சக்தியை வழங்குகின்றது.

ஒளி இணையாக்கத்திலுள்ள வேதியல் விளைவுகளுக்கு சூரிய ஒளியே சக்தியளிக்கின்றது. இயற்கையின் மாபெரும் ஒழுங்கமைப்பில் ஏற்படுத்தும் மாற்றங்களை விட இன்னும் அதிகமாக, நமது உடலின் சிக்கலான செயல் முறைகளிலும் கூடத் தனது பணியைச் சூரியன் செய்து வருகிறது.

பூமியில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் வெப்பம், ஒளி, ஆகாரம் ஆகியவற்றைச் சூரியன் தருகின்றது.

இயற்கையின் மாபெரும் இயந்திரங்களை இயங்க வைப்பது சூரியனின் சக்தியே,

அதே நேரம் தனிப்பட்ட முறையிலும் நாம் பயனடைகின்றோம்.

சூரியனின் கதிர்கள் நம் மீது படியும்போது நமது உடலின் இரத்த அழுத்தம் குறைகிறது. சூரியனின் கதிர்கள் எமது உடலின் ஆரோக்கியத்தையும், செயற்பாங்கையும் விருத்தி செய்கிறது.

சூரியக் குளியலானது இரத்தத்தின் சக்தியை அதிகரிக்கிறது சுவாச வேகத்தைச் சற்றே குறைப்பதற்கும், ஆழ்ந்த மூச்செடுப்பதற்கும், இதயத் துடிப்பின் வேகத்தைக் குறைப்பதற்கும் உதவுகிறது நமது உடலில உள்ள அனைத்து உறுப்புக்களும், கை, கால்களில் உள்ள தசைகளும் ஏராளமான இரத்தத்தைப் பெற்றுக் கொள்ளுகின்றன.

வியாதிகளுக்கு எதிராகப் போராடும் சக்தியும் சூரிய ஒளிக்கு உண்டு. தொற்று நோய்களுக்கு எதிராகப் போராடத்தக்கதாக உடலின் எதிர்ப்புச் சக்தியைச் சூரியஒளி பலப்படுத்துகிறது, தோலில் உள்ள கேடு விளைவிக்கும் பக்டீரியாக்களைக் கொன்று எம்மைப் பாதுகாக்கின்றது சூரியஒளியினால் எமது உடலில் வியாதிக்கு எதிராகப் போராடும் செல்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றன.

சூரியஒளியானது நமது வீட்டினுள் இடம்பிடித்துத் தங்கியிருக்கும் பக்டீரியாக்கள் அனைத்தையும் ஒழிக்கின்றது.

இவை யாவும் சூரியன் வழங்கும் அற்புத நலன்கள். ஒளியின் எல்லையற்ற ஆசீர்வாதத்தைப் பெறுவோம்,

நன்றி: நல்வழி

# 22 கோடி ரூபா ஜனசக்தி உதவி; வடக்கு கிழக்கிற்கு எதுவும் இல்லை!

ஜனசக்தித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 49,040 குடும்பங்களுக்கு சுயதொழில் வழங்குவதற்கென இலங்கை வங்கி, மக்கள் வங்கி, கூட்டுறவு வங்கிகள் என்பவற்றின் மூலம் கடந்த வருடம் மேமாதம் 21 கோடியே 90 லட்சம் ரூபா கடனாக வழங்கப்பட்டதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

25 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த 2154 கிராமங்களில் வசிப்போருக்கு இந்த கடன் உதவி வழங்கப்பட்டிருக்கிறது,

ஜனசக்தித் திட்டத்திற்கு வடகிழக்கில் 34,342 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் இராணுவ நடவடிக்கையைக் காரணம் காட்டி இவர்களுக்கு இந்த ஜனசக்தி உதவிகள் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக மறுக்கப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

★ செல்லச்சாமி பேட்டி:-

# தமிழர்கள் எல்லோருமே புலிகள் என்ற கருத்தில் இயங்கக் கூடாது

தமிழர்கள் எல்லோருமே புலிகள் என்ற எண்ணத்தில் இயங்குவது மேலும் மேலும் பிரச்சினையை ஏற்படுத்துவதோடு ஏனைய குழுக்கள் மீது அரசின் நம்பிக்கையின்மையையும் ஏற்படுத்திவிடும் இவ்வாறு கைத்தொழில் ராஜாங்க அமைச்சரும் இ. தோ. கா. பொதுச் செயலாளருமான எம். எஸ். செல்லச்சாமி கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

எனவே மலையகப் பகுதிகளில் புலிகள் இருப்பதாக சிலர் காட்டும் பூச்சாண்டிக்கு அரசு ஆதரவாக இருக்காமல் உண்மையை அறிந்து செயற்படவேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மலையகத்தில் இவ்வாறான பிரச்சினைகள் எழும்போது எப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என அரசுடன் நாம் ஒரு இணக்கம் கண்டுள்ளோம் அரசுடன் இரு வருடங்களுக்கு முன்னர் புலிகளுடன் நேசமாக இருந்த போது எவரும் எவரையும் உபசரிப்பது குற்றமாகக் காணப்படவில்லை.

இப்போது பிரச்சினை வந்ததால் முன்பு இருந்த தொடர்பைக்காட்டி ஒருவரை விசாரிப்பது வேடிக்கையாகவுள்ளது.

எனவே அரசின்மீதும் குற்றத்தையல்லவா சுமத்தவேண்டும்

சமரச முயற்சிகள் இன்று மேற்கொள்ளப்படுவதற்கு குந்தகம் ஏற்படுத்த நடக்கும் இந்தச் சதி முயற்சிக்கு அரசும் பலியாகி விடாமல் நிதானமாகச் செயற்பட வேண்டும் இவ்வாறு அவர் தனது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார் 06

## குரோவேஷிய அங்கீகாரம்

யூக்கோசிலேவியாவின் குரோவேஷிய மற்றும் சுலோவேனியா குடியரசுகளை 12 ஐரோப்பிய நாடுகள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய சமூகம் (E C) தனிநாடுகளாக நேற்று அங்கீகரித்தன ஏற்கனவே கடந்த மாதம் ஜேர்மனி இக்குடியரசுகளை தனிநாடுகளாக அங்கீகரித்திருந்தது.

## ஸ்ரீமா நாடு திரும்பும்வரை அனுரா எதிர்க்கட்சித் தலைவர்

திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா இந்தியா செல்வதற்கு முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவைக் கூட்டி கட்சியின் எதிர்காலம், நடவடிக்கைகள் குறித்து ஆராயவுள்ளார்.

இரண்டு மாதம் இந்தியாவில் தங்கியிருந்து அவர் ஓய்வுபெற்று நாடு திரும்பும் வரை மகன் அனுரா பண்டார நாயக்கா பதில் எதிர்க்கட்சித் தலைவராகக் கடமைபுரிவார் என சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (06)

## இந்திய- சோவியத் ஒப்பந்தம் முடிவுக்கு வந்தது

பல வருடங்களாக இந்தியாவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் இருந்த நட்புறவு ஒப்பந்தம் முடிவுக்கு வந்துள்ளது எனினும் புதிய ரஷ்ய அமைப்புடன் நட்புறவு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளது

இப்புதிய ஒப்பந்தம் பழைய நட்புறவு ஒப்பந்தம் போலில்லாமல் இருப்பதாகவும் இதனால் இந்தியா ஏமாற்றம் அடைந்துள்ளதாகவும் இந்திய தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## மின் கட்டணங்களை தபாலகங்களில் செலுத்தலாம்

தபாலகங்கள் மூலம் மின் கட்டணம் செலுத்தும் திட்டம் விரைவில் நடைமுறைக்கு வரும் என்று மின்சாரத் துறை அமைச்சர் சந்திரா பண்டார பிராந்திய மின் முகாமையாளர்கள் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

மேலும் தற்போது சனத் தொகையில் 35 வீதமானோர் மின்சாரத்தைப் பாவித்து வருவதாகவும் இது 1995 -ம் ஆண்டளவில் 50 வீதமாக உயருமெனவும் அவர் தெரிவித்தார். (22)

## பஞ்சாப் தேர்தல்

பஞ்சாப்பில் பெப்ரவரி 19 ஆம் திகதி பொதுத் தேர்தல்கள் நடைபெறும் என இந்திய தேர்தல் ஆணையாளர் சேஷன் நேற்று அறிவித்தார்.

## கப்பலில் வந்த ரயர், ரியூப் விநியோகிப்பது எப்படி?

குமண கப்பலில் யாழ்ப்பாணப்பகுதிக்கு எடுத்து வரப்பட்டுள்ள சைக்கிள் ரயர், ரியூப் என்பவற்றை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் பகிர்ந்தளிக்கப்பட்டதையடுத்து சங்கத்தினர் எந்த முறையில் இவற்றை விற்பனை செய்வது என்பது பற்றி செய்வதறியாத நிலையில் உள்ளதாகத் தெரிகிறது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பாவனையாளர்களிடம் விண்ணப்பங்களைக் கோரி குலுக்கல் மூலம் ரயர் ரியூப் வழங்குவதற்கு முயற்சி நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. 07

## நாய்களால் கடியுண்டு தினமும் 5 பேர் சிகிச்சை

யாழ் நகர்ப் பகுதிகளில் தெருவில் திரிகின்ற கட்டாக்காலி நாய்களைப்பிடிக்கும் பணியினை யாழ் மாநகர சபைப் பிரிவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமையிலிருந்து ஆரம்பித்துள்ளனர்.

யாழ் ஆஸ்பத்திரியில் மட்டும் நேற்று வரையில் 25 நாய்கள் பிடிக்கப்பட்டன.

மேலும் நகரில் இருபதுக்கும் மேற்பட்ட நாய்கள் பிடிக்கப்பட்டன.

கட்டாக்காலி நாய்கள் அதிகரித்துள்ளதால் நாய்க்கடிக்குள்ளாகி தினமும் ஐந்திற்கு மேற்பட்டோர் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவருவதையும் காணக்கூடியதாக உள்ளது. 07

---

### தோட்ட...

களை கழற்றி விட்டு சாதாரண உடையில் மலை மீது ஏறிச்சென்றதாகவும் அவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்,

வாகனத்தைச் செலுத்திச் சென்ற தோட்ட முகாமையாளர் வெடிச்சத்தம் கேட்டதும் இறந்தவர் போல கீழே கிடந்தாராம்.

வந்த இளைஞர்களில் ஒருவர் தோட்ட சின்னத்துரை இன்னமும் சாகவில்லை. சுடு! சுடு! என்று தமிழில் கூறியதாக இச்சம்பவத்தில் தப்பிய தோட்ட முகாமையாளர் பொலிஸாரிடம்கூறியுள்ளார் (06)

### காயமுற்ற..

இச்சம்பவத்தில் இறந்த பொலிஸ்காரர் பெர்னாண்டோவின் சடலமும் அவரது சொந்த ஊரான ஊவாபரணகமவுக்கு கொண்டு செல்லப்பட்டது. 06

### கொள்ளை...

கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இங்கு இடம்பெற்ற 20லட்சம் ரூபா கொள்ளை, படுகொலை சம்பவங்களையடுத்து இவர்கள் எல்ல பொலிஸ் நிலையத்துக்கு பலத்த பாதுகாப்புடன் கூட்டிச்செல்லப்பட்டனராம். (06)

### மட்டக்களப்புக்...

வாரம் இரு தமிழர்களைப் படையினர் சுட்டுக்கொன்று அவர்களது சடலங்களை வாவியொன்றில் வீசியெறிந்தனர்.

படையினர் துப்பாக்கிச் சூடு நடத்திய போது அப்பகுதியிலிருந்து ஓடியமக்கள் மீண்டும் திரும்பி வந்து இச் சடலங்களை மீட்டெடுத்தனர்.

### இராணுவ...

அமைப்பு நாடும், கிழக்கு ஐரோப்பிய நாடுமான செக்கோஸ்லவாக்கியா அண்மையில் ரி-54, ரி-55 ரக யுத்த டாங்கிகளை ஸ்ரீலங்காவிற்கு வழங்கியதைச் சுட்டிக்காட்டும் அவ் வட்டாரங்கள் இவை ஸ்ரீலங்கா நினைத்ததிலும் விடக் குறைந்த தொகைப் பணத்திற்கே வழங்கப்பட்டதாகச் சுட்டிக்காட்டுகிறது.

ரி-55 யுத்த டாங்கி முன்னாள் சோவியத் யூனியனுக்கு வெளியே செக்கோஸ்லவக்கியாவிலேயே தயாரிக்கப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

#### மேற்குலக நெருக்கடி காரணம்

மேற்குலக நாடுகள் இராணுவத் தளபாட விற்பனையிலும் உதிரிப்பாக விற்பனையிலும் கட்டுப்பாடுகளை விதித்து ஸ்ரீலங்காவை நெருக்குதலுக்குள்ளாக்கி வருவதால் ஸ்ரீலங்கா தரப்பு 'விலை குறைந்த ஆயுதங்களைக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கொள்வனவு செய்வதில் அக்கறை காட்டுகிறதாம்.

#### இந்தியாவுக்கு 'செக்' தளபதி விஜயம்

இதனிடையே இந்தியாவிற்கான இராணுவத் தளபாட விற்பனையில் பெரும்பங்காற்றிய சோவியத் யூனியன் உடைந்துவிட்டதால் இந்தியாவிற்கான தனது ஆயுத சந்தையை திறந்துவிடுவதில் செக்கோஸ்லவக்கியா தீவிரமாகச் செயற்படுகிறதாம். இதன் பொருட்டு அண்மையில் செக்கோஸ்லவக்கிய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கரோல் பெஸில் புதுடில்லி விஜயம் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

#### சீனத் தளபாடங்கள்

பாகிஸ்தானுக்கு இராணுவ உதவிகளை அமெரிக்கா இப்போது குறைத்துக் கொண்டு வருவதால் பாகிஸ்தான் சீனாவின் இராணுவ உதவியை நாடுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது

இதன்படி தற்போது இந்திய உபகண்ட நாடுகளிடையே பூட்டான் தவிர ஏனைய நாடுகள் சீனாவின் இராணுவத் தளபாட உதவியிலும் தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 06

### சாட்சியம்...

போதே சாட்சியத்துக்கு அழைக்கப்பட்ட 17 இராணுவத்தினரும் வாக்கு மூலம் அளிக்க முடியாது என மறுத்தனர்.

இப்படுகொலையில் பொது மக்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் குமார் பொன்னம்பலம் இராணுவம் சாட்சியம் அளிக்க மறுத்தமை குறித்து ஆச்சரியம் தெரிவித்தார். இராணுவத்தினர் மீது குறுக்கு விசாரணை செய்யாவிட்டால் வழக்கில் பயனில்லை என அவர் குறிப்பிட்டார்.

இராணுவத்தினரின் இம் முடிவால் படுகொலை விசாரணை இடைநடுவில் கைவிடப்படலாம் என பி. பி. ஸி. குறிப்பிட்டது.

கொக்கட்டிச்சோலை விசாரணையின் இறுதி அறிக்கையை இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் எதிர்பார்த்து காத்திருப்பதை பி. பி. ஸி. சுட்டிக்காட்டியது.

கடந்த ஆண்டு ஜூனில் நடைபெற்ற கொக்கட்டிச் சோலையில் இராணுவத்தினரால் நூற்றுக்கு மேற்பட்ட பொது மக்கள் சுடவும் வெட்டியும் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

### இரு பெண்...

சில அதிகாரங்களில் இருவரும் பிரச்சினைப்படுவதாகவும் தெரியவருகிறது 06

### காணாயற்..

சாலை மாணவர்களின் பெரும்பாலான பெற்றோர்கள் தமது பிள்ளைகளை கடத்திச் சென்றவர்களை அடையாளம் காட்ட முடியும் எனவும் தெரிவித்துள்ளனர். (06)

### பதுளைத்...

கொண்டபோது விடுவிப்பதாகக் கூறப்பட்டதாகவும், பின்னர் வேறு காரணங்கள் கூறுவதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (06)

### இடம்பெயர்ந்த...

கூடங்களும் அமைத்துக் கொடுக்க போருட் ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

இப் பாடசாலைகள் சிலவற்றில் மாணவர்கள் நிலத்தில் இருந்து படிப்பதால் அப் பாடசாலைகளுக்கு தளபாட வசதிகளையும் செய்துகொடுக்க இந்த ஸ்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது. (18)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி 'லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 16-01-1992 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது